திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சிவகங்கை மாவட்டம் 1983 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டது. அப்பொழுது அங்கு தமிழ்நாட்டிலேயே ஒரு மாடலாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கட்டப்பட்டது. ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட குடியிருப்புகள், அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் ஒரே வளாகத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளெல்லாம் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலான காரணத்தால் பல, group, group ஆக இருக்கக்கூடிய குடியிருப்புகளெல்லாம், இன்றைக்குச் சிதிலமடைந்து அங்கே யாரும் குடியிருக்க முடியாத நிலையில் வெளியிலே தங்கிப் பணியாற்ற வேண்டிய நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் குடியிருப்புகளை மாற்றி அமைப்பதோடு, அந்த வளாகத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆய்வு செய்து, பழுதடைந்திருந்தால், பழுதை நீக்கி, குடியிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வீட்டு வசதி வாரியம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

227—

மேம்பாலம்

***6530—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, இராமகிருஷ்ணம்பதி ஊராட்சி, காமாட்சிப்பட்டி–ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2014 ஜூலை 23]

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காமாட்சிப்பட்டி—ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்து நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கத்தை தமிழ்நாட்டு மக்களுக்குத் தருகின்ற தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

ஊத்தங்கரை தொகுதி, இராமகிருஷ்ணம்பதி ஊராட்சி, காமாட்சிப்பட்டி—ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட ஆவன செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையான திருத்தணி மலையைச் சுற்றி புறவழிச் சாலையை அமைத்தல் சம்பந்தமான அறிவிப்பை நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையிலே பொது அறிவிப்பாகச் செய்த வாழும் வீர மங்கை வேலு நாச்சியார், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி, முல்லைப் பெரியாறு அனைத்திலும் முடிசூடிய முதல்வர்களுள் முதல்வர், தமிழகத்தின் மேன்மைக்கு ஒப்பில்லா தாயின் ஓயாத உழைப்பால், சேதாரம் இன்றி 39—க்கு 37—ஐச் சேர்ப்பித்த சிறிதளவும்*

சிதறா சிந்தனைக் கொண்ட சிப்பாய்க் கூட்டத்தை வழி நடத்தும் வீரத் திருமகளாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உயர்ந்தோர், தாழ்ந்தோர், பேதத்தை நீக்கி, வல்லான் அருளோடு வாழும் மக்களை மதத்தால் பார்க்காமல் மனத்தால் பார்க்கும் மாதரசி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, காஞ்சித் தலைவனின் கண்ணியத்தைக் குணத்தில் வார்த்து, வெண்தாடி வேந்தனின் நல்லறிவை நடப்பில் கொண்டு, மக்கள் திலகத்தின் மனிதநேயத்தை மனதில் வைத்து, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மூன்றாவது முறையாக குயில்கள் பாடும் கலைக்கூடம் கண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அரசாங்கம் அமைத்து, இந்தியாவின் இணையில்லா மாநிலமாய், தமிழ் மண்ணை தலைநிமிரச் செய்திட போர்ப் பரணி பாடிவரும் புரட்சிகளின் உதயம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, திருத்தணி தொகுதி மக்கள் சார்பிலும் எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் புறவழிச் சாலை அறிவிப்பை வெளியிட்டு, 2015–2016 ஆம் ஆண்டில் அப்பணியைத் துவங்கிட ஆவன செய்துவரும் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருத்தணி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான திட்டங்களால் தமிழகம் உலகளவில் உயர்ந்து நிற்கச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே சாமந்தவாடா பகுதியில் உயர்மட்டப் பாலம் அமைத்திட அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள*

2014 ஜூலை 23]

அந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈத்தாபுரம் பேரூராட்சியிலே, பத்தரைபதியிலே பாம்பூரி வாய்க்கால் செல்கிறது. இரு ஊர்களையும் இணைக்க அந்தப் பகுதியிலே மேம்பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றாண்டு பொற்கால ஆட்சியில் 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு வங்கியின்மூலமாக 150 கோடி ரூபாய் கடன் பெற்று 65 பாலங்களும், 2012–2013 ஆம் ஆண்டு 250 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று, 121 பாலப் பணிகளும், 2013–2014 ஆம் ஆண்டு 256 கோடி ரூபாய் பெற்று, 125 பாலங்களும் ஆக, மூன்று ஆண்டுகளில் நபார்டு வங்கி மூலமாக 642 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று 311 பாலங்கள் கட்டுகின்ற பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில், ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*